# அமித்ஷா அடிக்கல் நாட்டும் 7 புதிய திட்டங்களின் சிறப்பு கண்ணோட்டம்

பா.ஜ.க.வின் மூத்த தலைவர்களில் ஒருவரும், மத்திய உள்துறை மந்திரியுமான அமித்ஷா 2 நாள் பயணமாக இன்று (சனிக்கிழமை) சென்னை வருகிறார். டெல்லியில் இருந்து காலை 10.50 மணிக்கு தனி விமானத்தில் புறப்படும் அவர், மதியம் 1.40 மணிக்கு சென்னை மீனம்பாக்கம் பழைய விமான நிலையத்தை வந்தடைகிறார்.

விமான நிலையத்தில் மத்திய மந்திரி அமித்ஷாவுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க தமிழக பா.ஜ.க. நிர்வாகிகள் ஏற்பாடு செய்து உள்ளனர். விமான நிலையத்தில் அவருக்கு மேளதாளத்துடன் பூரண கும்ப மரியாதை அளிக்கப்பட இருக்கிறது. ராஜாஅண்ணாமலைபுரத்தில் உள்ள லீலா பேலஸ் நட்சத்திர ஓட்டலை சென்றடையும் அமித்ஷா அங்கு சிறிது நேரம் ஓய்வு எடுக்கிறார்.

பின்னர், மாலை 4.15 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு கலைவாணர் அரங்கத்துக்கு அமித்ஷா வருகிறார். அங்கு, திருவள்ளூர் மாவட்டம் தேர்வாய்கண்டிகையில் ரூ.380 கோடியில் புதிய நீர்த்தேக்க திட்டத்தை நாட்டு மக்களுக்கு அர்ப்பணிக்கும் விழாவும், ரூ.61,843 கோடி மதிப்பீட்டில் சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தின் 2-ம் கட்ட பணி உள்பட பல்வேறு திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழாவும் நடைபெறுகிறது.

இந்த விழாவுக்கு முதல்- அமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமை தாங்குகிறார். துணை முதல்-அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் சிறப்புரை ஆற்றுகிறார். தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத் முன்னிலை வகிக்கிறார். மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா, தேர்வாய்கண்டிகை புதிய நீர்த்தேக்க திட்டத்தை நாட்டு மக்களுக்கு அர்ப்பணிப்பதுடன், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி விழா பேருரை ஆற்றுகிறார். .




சென்னை மெட்ரோ ரெயில் 2-ம் கட்ட ரெயில் திட்டத்துக்கு மத்திய மந்திரி அமித்ஷா இன்று அடிக்கல் நாட்டுகிறார். ரூ.61,843 கோடி செலவில் இந்த திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது.

இந்த 2-ம் கட்ட திட்டத்தில் 3 வழித்தடங்களில் மெட்ரோ ரெயில்கள் விட ஏற்பாடுகள் நடந்து வருகிறது. அதன்படி மாதவரம்-சிறுசேரி சிப்காட், மாதவரம்-சோழிங்கநல்லூர், கலங்கரைவிளக்கம்-பூந்தமல்லி இந்த 3 வழித்தடங்களின் மொத்த நீளம் 119 கிலோ மீட்டர்கள் ஆகும்.



மத்திய அரசு நிதி உதவி, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதி நிறுவனம், ஆசிய உள்கட்டமைப்பு முதலீடு ஆகியவற்றின் உதவியுடன் இந்த மெட்ரோ ரெயில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. 3 ஆண்டுகளில் இந்த திட்டப்பணிகளை முடிக்க இலக்கு நிர்ணயித்துள்ளன.

இந்த 3 வழித்தடங்களிலும் மெட்ரோ ரெயில்கள் இயங்க தொடங்கும்போது சென்னையில் போக்குவரத்து நெரிசல் முழுமையாக குறைந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகைய அருமையான திட்டத்துக்குதான் இன்று மாலை அமித்ஷா அடிக்கல் நாட்டுகிறார்.

2-வது கட்ட மெட்ரோ ரெயில் வழித்தடங்கள் சென்னை புறநகர்களை இணைக்கின்றன. இதன் காரணமாக மக்கள் சென்னையில் குடியேறுவது பரவலாக புறநகர்களுக்கு மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் தொடர்ச்சியாக புறநகர்களில் பொதுமக்களுக்கு வீடுகளின் தேவை அதிகரிக்கும். நிறைய புதிய வீடுகள் கட்டுமானப் பணிகளுக்கு வரும். இது தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியை கணிசமாக உயர்த்தும்.

மெட்ரோ ரெயில் 2-வது திட்டத்தின் 3 வழித்தடங்களிலும் ஏராளமான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. மாதவரம்- சோழிங்கநல்லூர் இடையே 47 கிலோ மீட்டர் தொலைவுக்கு அமைய இருக்கும் இந்த திட்டத்தில் 41 ரெயில் நிலையங்கள் இடம் பெறும்.

மாதவரம்-சிறுசேரி சிப்காட் இடையே 45 கிலோ மீட்டர் தொலைவுக்கு அமைய இருக்கும் வழித்தடத்தில் 49 ரெயில் நிலையங்கள் வரும். இதில் 20 ரெயில் நிலையங்கள் பூமிக்கு மேலும், 29 ரெயில் நிலையங்கள் பூமிக்கு அடியில் சுரங்கத்திலும் அமையும்.

பூந்தமல்லி-கலங்கரை விளக்கம் இடையே 26 கிலோ மீட்டர் தொலைவில் 30 ரெயில் நிலையங்கள் அமைய உள்ளன. இந்த நிலையில் சென்னை விமான நிலையம்-கிளாம்பாக்கம் இடையே மெட்ரோ ரெயில் நிலையம் அமைக்கப்பட்டால் வண்டலூர், ஊரப்பாக்கம் உள்ளிட்ட புறநகர் பகுதி மக்கள் மிகப்பெரிய நன்மையை அடைவார்கள். அதுமட்டுமின்றி கிளாம்பாக்கத்தில் அமைய இருக்கும் புறநகர் பேருந்து நிலையத்துக்கு சென்னை மக்கள் எளிதாக செல்ல வழிவகை ஏற்படும்.